36. கூற்றை ஆராய்க.

கூற்று(அ): அனைத்து தனி மனிதர்களும் கல்வியினைப் பெறுவதற்கு வாய்ப்புகளை கொண்டிருக்க வேண்டாம்

கூற்று(ஆ): அனைத்து தனி மனிதர்களின் ஆளுமையை மேம்படுத்தி வாய்ப்புகள் பெற்றிருத்தல் வேண்டும்.

(1) கூற்று (அ) சரி, (ஆ) தவறு
(2) கூற்று (அ) தவறு (ஆ) சரி
(3) கூற்று (அ), (ஆ) சரி
(4) கூற்று (அ), (ஆ) தவறு

37. உலகில் உள்ள அனைத்து நாடுகளின் ______ அதன் மக்களுக்கு சமத்துவத்தை உறுதி அளித்துள்ளன.

(1) வேலைவாய்ப்பும்
(2) சமயங்களும்
(3) பொருளாதாரமும்
(4) அரசியல் அமைப்பும்

38. இந்திய அரசியல் அமைப்பு அதன் குடிமக்களுக்கு சமத்துவத்தை அளிக்கும் சட்டப்பிரிவுகள் யாவை?

(1) 14 - 17
(2) 14 - 16
(3) 14 - 18
(4) 14 - 24

39. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்காக 17 குறிக்கோள்களில் ஐந்தாவது குறிக்கோள் என்ன?

(1) குடிமை சமத்துவம்
(2) சமூக சமத்துவம்
(3) அரசியல் சமத்துவம்
(4) பாலின சமத்துவம்

40. சட்டத்தின் முன் அனைவரும் சமம் மற்றும் அனைவருக்கும் சட்டத்தின் படி சமமான பாதுகாப்பை மேலும் வலிமைப்படுத்தும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு

(1) சட்டப் பிரிவு 21
(2) சட்டப்பிரிவு 20
(3) சட்டப்பிரிவு 19
(4) சட்டபிரிவு 18

LIVEWORKSHEETS

41. பாகுபாட்டைத் தடை செய்யும் அரசியலமைப்பு சட்டப்பிரிவு ______.

(1) 14 (2) 15 (3) 16 (4) 17

42. சமத்துவ உரிமைகளுடன் தொடர்புடைய சட்டப்பிரிவு ______.

(1) சட்டப்பிரிவு 23 (2) சட்டப்பிரிவு 32

(3) சட்டப்பிரிவு 17 (4) சட்டப்பிரிவு 30

43. சமத்துவத்தை மேம்படுத்தும் வழிகளில் இல்லாத ஒன்று ______.

(1) ஒரு சிலர் மட்டும் வாய்ப்புகள் பெறுவதை உறுதிப்படுத்துதல்.

(2) சட்டம் மற்றும் கொள்கைகளை வகுத்தல்.

(3) அனைவரையும் நியாயமாக நடத்துதல்.

(4) முழு ஆற்றலையும் மேம்படுத்த ஊக்குவித்தல்.

44. தீண்டாமையை ஒழிக்கும் சட்டப்பிரிவு ______.

(1) 17 (2) 16 (3) 15 (4) 14

45. சட்டபிரிவு - 14 உத்திரவாதம் அளிப்பது ______.

(1) பாகுபாடு தடை

(2) சட்டத்தின் முன் அனைவரும் சமம் இல்லை

(3) தீண்டாமையை ஒழிக்கமல் இருப்பது

(4) சட்டத்தின் முன் அனைவரும் சமம்

46. பொது வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சம வாய்ப்பு வழங்கும் சட்டப்பிரிவு

(1) 17 (2) 16 (3) 15 (4) 14

47. சரியான கூற்றுகளைத் தேர்ந்தெடு.

(i) சமத்துவ மேம்பாடு.

(ii) அனைவரையும் உள்ளடக்கிய ஓர் பண்பாட்டினை உருவாக்குதல்.

(iii) கல்வி, அனைவரும் வாய்ப்புகள் பெறுவதை உறுதிசெய்தல்.

LIVEWORKSHEETS

(iv) அனைவரையும் நியாயமாக நடத்தாமல் இருத்தல்.

(1) i, ii, iii, iv (2) i, ii, iv (3) i, ii, iii சரி (4) i, iii, iv

48. உலகின் மிகப்பெரிய மக்களாட்சி நாடு ______.

(1) இந்தியா (2) பாகிஸ்தான் (3) இலங்கை (4) வங்கதேசம்

49. பட்டங்களை அளித்து வேறுபடுத்துதல் தடை செய்யும் சட்டப்பிரிவு ______.

(1) 17 (2) 14 (3) 16 (4) 18

50. மக்களாட்சியில் தூண்களாக கருதப்படுவது ______.

(1) சமத்துவம் மற்றும் நீதி (2) சமத்துவம் மற்றும் சமயம்

(3) சமத்துவம் மற்றும் பாகுபாடு (4) சமத்துவம் மற்றும் சண்டைகள்

51. மக்கள் சமமாக நடத்தப்படும்போது பெறப்படுவது ______.

(1) ஆரோக்கியம் (2) நல்லறிவு (3) நீதி (4) நல்ல கருத்து

52. தேர்தலில் போட்டியிடும் உரிமை ______.

(1) சமத்துவ உரிமை (2) சட்ட உரிமை

(3) சாதாரண உரிமை (4) அரசியல் உரிமை

53. தனி மனித மாண்பினை தக்கவைப்பது ______.

(1) சமத்துவமின்மை (2) பொறுமை (3) சமத்துவம் (4) பாலினம்

54. நீதி பெறப்படும் ஓர் நிகழ்வு ______.

(1) மக்கள் சமமாக நடத்தப்படாமல் இருத்தல்

(2) மக்கள் உரிமைகளை பெறுவதனால்

(3) மக்கள் பொறுப்புடன் செயல்படுதல்

(4) மக்கள் சமமாக நடத்தப்படுதல்

55. சரியான கூற்றைத் தேர்ந்தெடு.

LIVEWORKSHEETS

(அ) 25 வயது பூர்த்தி அடைந்த எவரும் தேர்தலில் போட்டியிடலாம்.

(ஆ) மக்கள் அரசை விமர்சிக்கலாம்.

(இ) மாறுபட்ட கருத்தை பல்வேறு வகைகளில் தெரிவிக்கலாம்.

(1) அ, ஆ, இ சரி
(2) அ சரி, ஆ, இ தவறு
(3) அ, ஆ சரி, இ தவறு
(4) அ, ஆ, இ தவறு

56. பொது அலுவலகத்தில் பங்குகொள்ளும் உரிமை என்பது ______.

(1) பொது உரிமை
(2) பொதுப்பண்பு உரிமை
(3) அரசியல் உரிமை
(4) பொது செயல்பாட்டு உரிமை

57. பொருத்துக

| சட்டப்பிரிவு | விளக்கம் |
|---|---|
| (i) சட்டப்பிரிவு 16 - | a. பட்டங்களை அளித்து வேறுபடுத்துதலை தடை செய்கிறது. |
| (ii) சட்டப்பிரிவு 14 - | b. வேலைவாய்ப்பில் அனைவருக்கும் சமவாய்ப்பு. |
| (iii) சட்டப்பிரிவு 18 - | c. சட்டத்தின் முன் அனைவரும் சமம். |
| (iv) சட்டப்பிரிவு 15 - | d. பாகுபாட்டைத் தடை செய்கிறது. |

(1) i - c ii - b iii - d iv - a
(2) i - b ii - c iii - a iv - d
(3) i - c ii - a iii - b iv - d
(4) i - d ii - b iii - c iv - a

58. தவறான இணையைக் கண்டுபிடி.

(1) சட்டப்பிரிவு 15 - பாகுபாட்டை தடை செய்கிறது.
(2) சட்டப்பிரிவு 17 - தீண்டாமை ஒழிப்பு.
(3) சட்டப்பிரிவு 21 - பட்டங்களை தடை செய்கிறது.
(4) சட்டப்பிரிவு 14 - சட்டத்தின் முன் அனைவரும் சமம்.

59. 2017 ஆம் ஆண்டில் நிலையான மேம்பாட்டிற்கான பதினேழு குறிக்கோள்களில் ஐந்தாவது குறிக்கோளாக பாலின சமத்துவத்தைக் குறிப்பிட்டுள்ள நிறுவனம்

(1) ஐக்கிய நாடுகள் சபை
(2) யூனிசெப்

LIVEWORKSHEETS

(3) ஐக்கிய வங்கி (4) ஐக்கிய கழகம்

60. பெண்களை மேம்படுத்தும் விதமாக உள்ளாட்சி அமைப்புகளில் எவ்வளவு சதவீதம் இட ஒதுக்கீடு வழங்கப்பட்டுள்ளது?

(1) 25% (2) 45% (3) 65% (4) இவற்றில் ஏதுமில்லை

61. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும். NMMS-2020-21)

(1) பிரிவு 14 (2) பிரிவு 16 (3) பிரிவு 28 (4) பிரிவு 18

LIVEWORKSHEETS